# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 10 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்<br>பெயர் / சுட்டெண் : ................................................. | நேரம் :<br>3.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |

## பகுதி - I

**01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**மனிதர்களுக்குத் தேவையான பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது அவற்றை விநியோகித்தல் தொடர்பிலான கருமங்களில் ஈடுபடும் நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் வணிகங்கள் எனப்படும்.**

01. மனித தேவையாகக் கருதப்படுபவை
1) வீடு 2) சவர்க்காரம் 3) இலவச சீருடை 4) குழாய் நீர்

02) பின்வருவனவற்றுள் பொருள் உற்பத்தி வணிகம் எது?
1) சில்லறை வியாபார வணிகம் 2) ரயர் உற்பத்தி
3) வாகனம் திருத்துதல் 4) வைத்தியசாலை

03. வெளியகச் சூழல் காரணியாகக் கருதப்படுவது
1) உரிமையாளர் 2) பூகோளச்சூழல் 3) வாடிக்கையாளர் 4) ஊழியர்கள்

04. வணிகமொன்றின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வணிகத்தின் வளங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான தீர்மானம் மேற்கொள்ளும் நபர்களை எவ்வாறு அழைப்பர்?
1) உரிமையாளர் 2) ஊழியர்கள் 3) முதலீட்டாளர்கள் 4) முகாமையாளர்கள்

05. பணவீக்கம் எனும் காரணி உள்ளடங்குவது
1) பூகோளச் சூழலில் 2) பொருளாதாரச் சூழலில்
3) மக்கட் சூழலில் 4) விஞ்ஞான தொழில்நுட்பச் சூழலில்

06. உள உழைப்பை வழங்குவோர் யாவர்?
1) கணக்காளர்கள் 2) சுரங்கத்தொழிலாளர்கள் 3) சுத்திகரிப்பாளர் 4) பாரம் தூக்குவோர்

07. உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் உற்பத்தியின்போது, துணையாகக் கொள்ளப்படுபவைகளும் எவ்வாறு அழைக்கப்படும்?
1) மூலதனம் 2) கட்டடம் 3) உழைப்பு 4) முயற்சி

08. வணிகத்திற்குத் தேவையான நிதியினை ஈடுபடுத்தி அதன் இடர்களைப் பொறுப்பேற்கும் நபர்களை ........................ என அழைப்பர்.
1) முகாமையாளர் 2) எதிர்கால முதலீட்டாளர் 3) கடன்கொடுத்தோர் 4) உரிமையாளர்கள்

09. பின்வருவனவற்றுள் பொதுத்துறை வணிக அமைப்பு எது?
1) தனியார் கம்பனி 2) கூட்டுத்தாபனங்கள் 3) கூட்டுறவு 4) பங்குடமைகள்

10. "வணிக உரிமையாளர்கள் தமது முழுப்பெயரிலன்றி வேறு பெயரில் வணிகத்தை நடாத்தினால் வணிகத்தின் பெயரை பதிவு செய்ய வேண்டியது அவசியமானதாகும். அத்தகைய அமைப்பு எது?
1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் 2) கூட்டுத்தாபனங்கள்
3) தனிவியாபாரம் 4) கூட்டுறவு

11. பங்குடமை ஒன்றின் பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என வரையறுக்கும் சட்டம் எது?
1) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
2) 1918 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க வணிகப்பெயர் கட்டளைச் சட்டம்
3) 1972 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சட்டம்
4) 1840 ஆம் ஆண்டு பங்குடமைச் சட்டம்



kalvi.lk

12. அங்கத்தவர்களது நலன் தொடர்பாகச் செயற்படும் அமைப்பு அல்லாதது யாது?
1) விளையாட்டுக் கழகங்கள்
2) கூட்டுறவுச் சங்கங்கள்
3) அரச திணைக்களங்கள்
4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

13. தனியார் வணிக அமைப்பு ஒன்று ஆரம்பித்து எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்?
1) 1 மாதத்திற்குள்
2) 14 நாட்களுக்குள்
3) 7 நாட்களுக்குள்
4) 20 நாட்களுக்குள்

14. "தெங்கு அபிவிருத்திச் சபை" ஆனது ஒரு
1) தனியார் உடமை வணிக அமைப்பு
2) பங்குடமை வணிக அமைப்பு
3) அரச கூட்டுத்தாபன அமைப்பு
4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

15. மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக நுகர்வோருக்கு வழங்கப்படும் ஒரு செயற்பாடு அல்லது செயன் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
1) பொருட்கள்
2) சேவைகள்
3) ஆலோசனைகள்
4) வியாபாரங்கள்

16. அமெரிக்க நாட்டின் நாணயத்திற்கு வழங்கும் பெயர் என்ன?
1) டொலர்
2) யென்
3) ரூபாய்
4) யூரோ

17. வணிக நிறுவனமொன்று தமது நிலைமையினை ஆய்வு செய்யும்போது, SWOT நுட்ப முறையினைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் "S" குறிப்பது எதனை?
1) பலவீனம்
2) அச்சுறுத்தல்
3) பலம்
4) வாய்ப்பு

18. உலகத்தின் எல்லா நாடுகளிலும் பரவலாகக் காணப்படும் வணிக அமைப்பு பின்வருவனவற்றுள் எது?
1) பங்குடமை
2) தனியார் உரிமை வணிகம்
3) கூட்டுறவு
4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

19. ஊழியர் தொகை 25 இற்கும் குறைந்த வணிகத்தை எவ்வாறு அறிமுகஞ் செய்வர்?
1) பாரிய அளவு வணிகங்கள்
2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
3) சங்கங்கள் கழகங்கள்
4) சிறிய, நடுத்தர வணிகங்கள்

20. ரூபா 1000 அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்ப மூலதனத்தைக் கொண்ட பங்குடமை வணிகத்தின் ஒப்பந்தம் எழுத்துமூலம் காணப்பட வேண்டும் என வலியுறுத்தும் சட்டம்
1) மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
2) 1918 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க வணிகப் பெயர் கட்டளைச் சட்டம்
3) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம்
4) 1840 ஆம் ஆண்டு பங்குடமைச் சட்டம்

21. பின்வருவனவற்றுள் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படும் தகவலைத் தெரிவு செய்க.
1) வணிகச் சூழல் பாதுகாப்பானது
2) ஊழியர்கள் வினைத்திறன் மிக்கவர்கள்
3) தை மாத வாடகை செலுத்தியது 10,000 ரூபா
4) வணிகத்தின் வளர்ச்சிப்போக்கு ஆரோக்கியமாக உள்ளது

22. வணிகத்தின் செயற்பாட்டுக் கருமங்களின் மூலமான உழைப்பை எவ்வாறு அழைப்பர்?
1) வருமானங்கள்
2) மூலதனம்
3) செலவுகள்
4) சொத்துக்கள்

23. பல்பொருள் விற்பனை வணிக நிறுவனமொன்றில் காணப்படும் நீண்ட காலம் பாவிக்கக்கூடிய உயர் பெறுமானம் கொண்ட வளமாகக் கருதக்கூடியது
1) காசு
2) கடன்பட்டோர்
3) வங்கிக்கடன்
4) தளபாடம்

24. வணிகக் கருமங்களின் போது 12 மாதங்களைக் கொண்ட குறுகிய காலத்தினுள் பயன்படுத்துவதற்கு அல்லது மீள விற்பனை செய்வதற்கு அல்லது பணமாக மாற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வளங்களை எவ்வாறு அழைப்பர்?
1) நடைமுறை அல்லாச் சொத்துக்கள்
2) நடைமுறைச் சொத்துக்கள்
3) மூலதனம்
4) பொறுப்புக்கள்



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

* **25 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.**

பிள்ளையார் வணிகத்தின் 2014 தைமாத கொடுக்கல் வாங்கல் சில

A. வாடகை செலுத்தியது 25 000 ரூபா
B. உரிமையாளர் வணிகத்திற்கு கொண்டு வந்த தளபாடம் 50 000 ரூபா
C. 200,000 ரூபா வங்கிக்கடன் திருப்பிச் செலுத்தப்பட்டது
D. உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக தனது வணிக நிறுவனத்திலிருந்து எடுத்த சரக்கிருப்பு 35 000 ரூபா
E. சரக்கிருப்புக் கொள்வனவு 15 250 ரூபா
F. சரக்கிருப்பு விற்பனை 27 000 ரூபா (கொள்வனவுப் பெறுமதி 25 000 ரூபா)

25. மேற்படி வணிக நிறுவனத்தின் மூலதனத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
1) A  2) B  3) C  4) D

26. மூலதனத்தில் குறையை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் எவை?
1) A யும் E யும்  2) B யும் E யும்  3) A யும் D யும்  4) B யும் D யும்

27. 'C' எனும் கொடுக்கல் வாங்கலால் வணிகத்தின் எந்த உருப்படிகளில் தாக்கம் ஏற்படும்?
1) சொத்துக்கள், மூலதனம்  2) மூலதனம், பொறுப்புக்கள்
3) பொறுப்புக்கள், வருமானங்கள்  4) சொத்துக்கள், பொறுப்புக்கள்

28. 'D' என்ற நடவடிக்கையை எவ்வாறு அழைப்பர்?
1) பற்றுக்கள்  2) வருமானங்கள்  3) கொள்வனவுகள்  4) மேலதிக மூலதனம்

29. 'E' என்ற கொடுக்கல் வாங்கலால் ஏற்படும் இரட்டைவிளைவு
1) சொத்து அதிகரிக்கும், சொத்து குறையும்
2) சொத்து குறையும், பொறுப்பும் குறையும்
3) பொறுப்பு அதிகரிக்கும், மூலதனமும் அதிகரிக்கும்
4) மூலதனம் குறையும், பொறுப்பு அதிகரிக்கும்

30. 'F' என்ற கொடுக்கல் வாங்கலால் மூலதனத்தில் ஏற்படும் மாற்றம் எது?
1) 27 000 ரூபா அதிகரிப்பு ஏற்படும்  2) 25 000 ரூபா குறைவு ஏற்படும்
3) 2 000 ரூபா அதிகரிப்பு ஏற்படும்  4) 2 000 ரூபா குறைவு ஏற்படும்

31. பின்வருவனவற்றுள் வரவு மற்றும் செலவுமீதியாகக் காணப்படும் உருப்படிகள் முறையே
1) மின்சாரச் செலவு 5,000 ரூபா, எழுதுபொருட் செலவு 2,500 ரூபா
2) காசு மீதி 25,000 ரூபா, வங்கிக்கடன் 50,000 ரூபா
3) வங்கிக்கடன் 50,000 ரூபா, மூலதனம் 250,000 ரூபா
4) விற்பனைகள் 70,000 ரூபா, கொள்வனவுகள் 55,000 ரூபா

32. மூலதனக்கணக்கு, பற்றுக்கணக்கு இவை இரண்டும் எவ்வகைக் கணக்குகள்?
1) சொத்துக்கணக்குகள்  2) பொறுப்புக்கணக்குகள்  3) உரிமைக்கணக்குகள்  4) வருமானக்கணக்குகள்

33. இரு கணக்குகளிலும் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
1) சம்பளம் செலுத்தியது 5000 ரூபா
2) கடன் கொடுத்தோரான விமலனுக்கு செலுத்திய பணம் 27,000 ரூபா
3) உரிமையாளர் கொண்டு வந்த தளபாடம் 30,000 ரூபா
4) வங்கிக்கடன் பெற்றது 45,000 ரூபா

34. கணக்கீட்டுச் சமன்பாட்டில் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் இரட்டை விளைவு கீழே தரப்படுகிறது.

| சொத்துக்கள் | = | மூலதனம் | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| + 50,000 | = | .................. | + | ...................... |
| − 50,000 | | | | |

மேலுள்ள கண்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் எது?
1) வாடகை செலுத்தியது 50,000 ரூபா  2) பெற்ற தரகு 50,000 ரூபா
3) தளபாடம் வாங்கியது 50,000 ரூபா  4) மூலதனம் இட்டது 50,000 ரூபா



kalvi.lk

35. X நிரலில் இரண்டு பேரேட்டுக் கணக்குகளும் Y நிரலில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கான இரட்டைப் பதிவுத் தத்துவமும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. வங்கிக்கடன் கணக்கு<br>2. காசுக்கணக்கு | A - சொத்துக்கள். - அதிகரித்தல் வரவு, குறைதல் செலவு<br>B - செலவினங்கள் - அதிகரித்தல் செலவு, குறைதல் வரவு<br>C - பொறுப்புக்கள் - அதிகரித்தல் செலவு, குறைதல் வரவு<br>D - சொத்துக்கள் - அதிகரித்தல் செலவு, குறைதல் வரவு |

X நிரலிலுள்ள பேரேட்டுக் கணக்குகளுக்குப் பொருந்தத்தக்க Y நிரலிலுள்ள பொருத்தமான இரட்டைப்பதிவுத் தத்துவங்களைச் சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடை யாது?
1) Aயும் Dயும் 2) Bயும் Dயும் 3) Bயும் Cயும் 4) Cயும் Aயும்

36. மூல ஏடாகவும் பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படும் முதன்மை ஏடு எது?
1) கொள்வனவு நாளேடு 2) பொதுத்தினசேரி 3) காசேடு 4) விற்பனை நாளேடு

37. விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் எது?
1) குகன் களஞ்சியத்திடம் மீள் விற்பனைப் பொருள் கொள்வனவு 15,000 ரூபா
2) நாதன் வணிகத்திற்கு மீள்விற்பனைப் பொருள் விற்பனை 50,000 ரூபா
3) காசு விற்பனை 50,000 ரூபா
4) நடைமுறை அல்லாச் சொத்தான தளபாடம் விற்பனை 50,000 ரூபா

38. தளபாடத் திருத்தச் செலவு 15,000 ரூபா இக்கொடுக்கல் வாங்கலுக்கான சரியான இரட்டைப்பதிவு யாது?
1) தளபாடத் திருத்தச் செலவுக்கணக்கு வரவு 15,000 ரூபா
   காசுக்கணக்கு செலவு 15,000 ரூபா
2) தளபாடக் கணக்கு வரவு 15,000 ரூபா
   காசுக்கணக்கு செலவு 15,000 ரூபா
3) காசுக்கணக்கு வரவு 15,000 ரூபா
   தளபாடத் திருத்தச் செலவுக்கணக்கு செலவு 15,000 ரூபா
4) காசுக்கணக்கு வரவு 15,000 ரூபா
   தளபாடக்கணக்கு செலவு 15,000 ரூபா

Education கல்வி අධ්‍යාපන

39, வங்கியின் நடைமுறைக் கணக்கினூடாக நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் எந்த ஏட்டில் பதியப்படும்?
1) பொதுநாட்குறிப்பேடு 2) சில்லறைக் காசேடு 3) காசேடு 4) வங்கிக்கடன் கணக்கு

40. காசுக் கொடுப்பனவுக்கான மூல ஆவணம் எது?
1) பற்றுச்சீட்டு 2) கைச்சாத்து 3) பட்டியல் 4) வைப்புச்சீட்டு



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, பகுதி - I இலிருந்து இரண்டு வினாக்களையும்,
பகுதி - II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து
எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (I) தொடக்கம் (X) வினாக்களுக்கு விடை தருக.**

மத்திய கிழக்கு நாடொன்றில் விற்பனை உதவியாளராகப் பணிபுரிந்து விட்டு நாடு திரும்பிய நாதன் என்பவர் தான் முன்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தொழிநுட்ப உத்தியோகஸ்தராகப் பணிபுரிந்த அறிவைக் கொண்டு ஒலிபெருக்கி சாதனங்களை வாடகைக்கு வழங்கி வருமானம் ஈட்டிக்கொண்டிருந்தார். தனது வீட்டுச் சூழலுக்கு அண்மையில் பாரிய வியாபார நிலையங்கள் இல்லாத காரணத்தால் பல்பொருள் விற்பனை நிலையத்தை குமரன் பல்பொருள் வாணிபம் எனும் பெயரில் 2014 தை முதலாந்திகதி ஒரு சுபநேரத்தில் ஆரம்பித்தார், ஆரம்பச் செலவுகளை ஈடு செய்யும் நோக்குடன் தனது சேமிப்பு வைப்பில் இருந்த 500,000 ரூபாவையும் வங்கியில் இருந்து 100,000 ரூபா கடனொன்றும் பெற்றுக் கொண்டார். பாடசாலை ஒன்றும் அருகில் இருப்பதால் 95,000 ரூபா பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றையும் கொழும்பு ரோக்கியோ நிறுவனத்திடம் கடனடிப்படையில் கொள்வனவு செய்தார். வணிகத் தேவைக்காக ஒவ்வொன்றும் 60,000 ரூபா பெறுமதியான றாக்கை இரண்டும் கொள்வனவு செய்தார்.

**தை மாதத்தில் பின்வரும் செலவுகளை அவர் மேற்கொண்டிருந்தார்.**

மின்சாரம் செலுத்தியது 2,500 ரூபா
உடன் காசுக்கு மீள்விற்பனைப் பொருள் கொள்வனவு 50,000 ரூபா
வேணி களஞ்சியத்திடம் மீள் விற்பனைப் பொருள் கொள்வனவு 25,000 ரூபா
வாடகை 15,000 ரூபா

**தை மாதத்தில் கீழ்வரும் வருமானங்களையும் ஈட்டிக்கொண்டார்.**

மீள்விற்பனைப்பொருள் உடன் காசு விற்பனை 60,000 ரூபா
ஏகலைவனுக்கு விற்பனை 35,000 ரூபா
பெற்ற தரகு 7,500 ரூபா

தான் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களைக் கொப்பி ஒன்றில் குறித்து வைத்திருந்தார். பிரதேச சபை வரி அறவிடும் தரப்பினர் வருகை தந்த போது, முறையான கணக்குப் பதிவின் அவசியத்தை உணர்ந்தார். அதற்கெனப் பொருத்தமான நபரை நியமிக்கவும் தீர்மானித்தார். வணிகத்தின் வளர்ச்சிப் போக்கை அவதானித்த நண்பர் விமலன் தன்னிடமுள்ள 400,000 ரூபா பணத்தை ஈடுபடுத்தி குமரன் பல்பொருள் வாணிபத்தை மேலும் விஸ்தரிப்பதற்காக பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் இணைந்து கொண்டார்.

i) குமரன் பல்பொருள் வாணிபத்தில் காணப்படும் பொருள் ஒன்றும் சேவை ஒன்றும் எழுதுக.

ii) இவ வணிகத்தின் பலம் ஒன்றும் வாய்ப்பு ஒன்றும் எழுதுக.

iii) இந் நிறுவனத்தின் பெயரைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமா? காரணம் தருக.

iv) இவ் வணிகத்தின் தகவல்களில் அக்கறை செலுத்தும் தரப்பினர் 02 தருக.

v) விமலன் இணைந்து கொள்வதால் ஏற்படும் சாதகமான விளைவு ஒன்றும் பாதகமான விளைவு ஒன்றும் தருக.

vi) இவ் வணிகத்தின் ஆரம்ப மூலதனம், நடைமுறை அல்லாப் பொறுப்பின் பெறுமதிகளைத் தனித்தனியாகத் தருக.

vii) தை மாதத்தில் காணப்பட்ட நடைமுறை அல்லாச் சொத்தின் பெறுமதியைத் தருக.

viii) குமரன் பல்பொருள் வாணிபத்தில் பேணப்பட வேண்டிய இரண்டு முதன்மை ஏடுகளும், அதற்குரிய மூல ஆவணங்கள் தலா ஒவ்வொன்று தருக.

ix) வங்கிக்கடன் பெற்றுக் கொண்டமைக்கான இரட்டைப் பதிவைத் தருக.

x) தைமாத முடிவில் குமரன் பல்பொருள் வாணிபத்தின் காசு மீதியைத் தருக.

(2×10=20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - I (அ) வணிகக்கல்வி

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

02\. i) வணிகத்தின் பிரதான நோக்கங்கள் 02 தருக.

ii) தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் 02 தருக.

iii) வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களை 02 வகையாகப் பிரிக்க முடியும். அவை எவை?

iv) உற்பத்திக்காரணிகள் 04 தருக.

v) பாடசாலை ஒன்றில் அக்கறை செலுத்தும் தரப்பினர் 04 தருக.

(2×5=10 புள்ளிகள்)

03\. "எந்தவொரு வணிகத்தை நோக்கினும் அதனுடன் தொடர்புடைய சூழலொன்று காணப்படும்."

i) வணிகச் சூழல் என்பதனை வரையறுக்க.

ii) அகச்சூழல் காரணிகள் 04 தருக.

iii) வணிகம் தொடர்பாக அரசினால் அமுல்படுத்தப்படும் சட்டவிதிகளை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பதவிகள் மற்றும் நிறுவனங்கள் 02 தருக.

iv) உள்நாட்டு வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவு 02 உம் பாதகமான விளைவு 02 உம் தருக.

v) வணிகமொன்றில் காணப்படும் அச்சுறுத்தல்களுக்கு 02 உதாரணங்கள் தருக.

(2×5=10 புள்ளிகள்)

04\. "மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்குப் பல்வேறு வணிக அமைப்புகள் தோற்றம் பெற்றுள்ளன."

i) உரிமை அடிப்படையில் வணிக அமைப்புகளை வகைப்படுத்துக.

ii) தனியார் உரிமை வணிகத்தின் பண்புகள் 02 தருக.

iii) கூட்டுறவுச் சங்கத்தின் அனுகூலங்கள் 02 உம் பிரதிகூலங்கள் 02 உம் தருக.

iv) மேற்படி வணிக அமைப்புகளில் சட்டஆளுமை உள்ள வணிக அமைப்பு 03 உம் சட்ட ஆளுமை அற்ற வணிக அமைப்புகள் 02 உம் தருக.

v) கீழ்வரும் வணிக அமைப்புகள் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் முறையினைத் தனித்தனியாகச் சுட்டிக்காட்டுக.
அ) வரையறுத்த பிரியா கம்பனி
ஆ) விமலா ஸ்ரோர்ஸ்
இ) இளைஞர் நற்பணிச் சங்கம்
ஈ) இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

(2×5=10 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II கணக்கீடு

05. i) நந்தா வணிகத்தின் 2014 தைமாத கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட இரட்டை விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | காசு | = | மூலதனம் | | |
| | + 500,000 | = | + 500,000 | | |
| ஆ) | சரக்கிருப்பு | = | கடன்கொடுத்தோர் | | |
| | + 30,000 | = | + 30,000 | | |
| இ) | காசு | | | | |
| | – 50,000 | | | | |
| | தளபாடம் | | | | |
| | + 50,000 | | | | |
| ஈ) | காசு | = | பெற்ற தரகு | | |
| | + 2,500 | = | + 2,500 | | |
| உ) | காசு | = | கடன்கொடுத்தோர் | | |
| | –10,000 | = | –10,000 | | |

**செய்ய வேண்டியது:**
அ)தொடக்கம் (உ) வரையுள்ள இரட்டை விளைவுக்குப் பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களைத் தனித்தனியாகத் தருக.

(05 புள்ளிகள்)

ii) இடைவெளியைப் பூர்த்தி செய்க.

| | உரிமையாண்மை | பொறுப்புக்கள் | சொத்துக்கள் |
|---|---|---|---|
| அ) | 100,000 | ............ | 125,000 |
| ஆ) | ............ | 75,000 | 500,000 |
| இ) | 200,000 | ............ | 600,000 |

(03 புள்ளிகள்)

iii) வணிக நிறுவனமொன்றின் மார்ச் மாத கொடுக்கல் வாங்கல் சிலவற்றின் இரட்டைப் பதிவு பேரேட்டுக் கணக்குகளில் பதியப்பட்ட முறைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் விடுபட்ட பதிவுகளைத் தருக.

2014 மார்ச் மாத காசேடு

| திகதி | பற் இல. | விபரம் | பே ப | தொகை | திகதி | கச் இல. | விபரம் | பே ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1/3 | | மூலதனம் | | 500,000 | | | | | |

மூலதனக் கணக்கு

| | |
|---|---|
| | |

விற்பனைக் கணக்கு

| | |
|---|---|
| | 4/3 காசு 25,000 |

(02 புள்ளிகள்)



kalvi.lk

06. i) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

| | கொடுக்கல் வாங்கல் | மூல ஆவணம் | மூல ஏடு |
|---|---|---|---|
| அ) | காசு பெறுவனவு | பற்றுச்சீட்டு | ........................................... |
| ஆ) | காசோலைகள் மூலமான கொடுப்பனவுகள் | ........................................... | காசேடு |
| இ) | ................................................................................ | சில்லறைக் காசுக் கச்சாத்து | சில்லறைக் காசேடு |
| ஈ) | மீள் விற்பனைப் பொருளைக் கடனுக்கு கொள்வனவு செய்தல் | கிரயப் பட்டியல் | ........................................... |
| உ) | ................................................................................ | விற்பனைப் பட்டியல் | விற்பனை நாளேடு |

(01×5=05 புள்ளிகள்)

II) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இரட்டைப் பதிவை எழுதிக் காட்டுக.

1. கடனுக்கு விற்பனை செய்தல் 10,000 ரூபா
2. கடனுக்கு கொள்வனவு செய்தல் 7,000 ரூபா
3. வங்கியில் இருந்து கடன் பெறல் 25,000 ரூபா
4. கடன்படுனர்களிடம் இருந்து காசு பெறல் 8,000 ரூபா
5. வங்கிக்கடன் திருப்பிச் செலுத்துதல் 15,000 ரூபா
6. காசாகப் பற்றுதல் 3,000 ரூபா
7. வாடகை செலுத்துதல் 2,500 ரூபா
8. பெற்ற தரகு 350 ரூபா
9. காசாக மேலதிக மூலதனமிடல் 100,000 ரூபா
10. உபகரணக் கொள்வனவு 30,000 ரூபா

(½×10=05 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

07. i) காசேட்டின் இரட்டைத் தொழிற்பாட்டை எழுதுக. (01 புள்ளி)

ii) மூல ஆவணங்களின் நன்மைகள் 02 தருக. (½ × 2=01 புள்ளி)

iii) கணநாதன் வணிகத்தின் 2014 மார்ச் மாதக் கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1.3.2014 | மூலதனம் இட்டது | 700,000 ரூபா |
| 2.3.2014 | காசுக்கொள்வனவு | 25,000 ரூபா |
| 4.3.2014 | காசு விற்பனை | 37,500 ரூபா |
| 6.3.2014 | மின்சாரம் செலுத்தியது | 2.600 ரூபா |
| 7.3.2014 | பெற்ற தரகு | 3,750 ரூபா |
| 10,3.2014 | தளபாடம் வாங்கியது | 25,000 ரூபா |
| 12.3.2014 | வாடகை செலுத்தியது | 4,000 ரூபா |
| 14.3.2014 | வங்கிக்கடன் பெற்றது | 15,000 ரூபா |
| 17.3.2014 | தளபாடத் திருத்தச்செலவு | 3,000 ரூபா |
| 20.3.2014 | வங்கிக்கடன் திருப்பிச் செலுத்தியது | 10,000 ரூபா |

மேற்படி கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டு 2014 ஆம் ஆண்டு தை மாதத்திற்கான கணநாதன் வணிகத்தின் காசேட்டைத் தயாரித்து காசு மீதியைக் காண்க.

(08 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457